අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
ඉසුරුපාය, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இசுருபாய, பத்தரமுல்லை, இலங்கை
Isurupaya, Battaramulla, Sri Lanka
www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref	ED/01/103/02/06(v)	ඔබේ අංකය / உமது இல. / Your Ref.		දිනය / திகதி / Date	2025.06. \ 8

சுற்றுநிருப இலக்கம் : 21/2025

அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து விடயப் பொறுப்பு பி.க.ப/ உ.க பணிப்பாளர்கள்,
அனைத்து பாடசாலை அதிபர்கள்

இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் (SESIP) கீழ் குறிப்பிட்ட பாடங்களின் அபிவிருத்திக்காக பாடசாலை மைய நிதிக் கொடைகளை வழங்குவது தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேடு - 2025

குறிப்பிட்ட பாடங்களின் அபிவிருத்திக்காக பாடசாலை மைய நிதிக் கொடைகளை வழங்குவது தொடர்பில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2022.03.30 ம் திகதி மற்றும் 07/2022 இலக்க, இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் (SESIP) கீழ் குறிப்பிட்ட பாடங்களின் அபிவிருத்திக்காக பாடசாலை மைய நிதிக் கொடைகளை வழங்குவது தொடர்பான சுற்றுநிருபம், அதற்கு திருத்தமான 2022.08.24ம் திகதியுடைய, இலக்கம் 07/2022 (i) சுற்றுநிருபம் மற்றும் 2023.05.25ம் திகதியுடைய, இலக்கம் 07/2022 (ii) சுற்றுநிருபங்களையும் தாண்டி இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் 2025.06.20ம் திகதி முதல் வலுவில் இருக்கும்.

02. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் (SESIP) கீழ், இரண்டாம் நிலைக் கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதற்காக இலக்காக கொண்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள 13 பாடங்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நியதிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு நிதிக் கொடைகளை வழங்குவதற்கு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

<u>க.பொ.த (சா.த) பாடங்கள்</u>

- கணிதம்
- விஞ்ஞானம்

<u>க.பொ.த (உயர் தர) பாடங்கள்</u>

- இரசாயானவியல்
- பௌதிகவியல்
- உயிரியல்
- இணைந்த கணிதம்
- பொறியியல் தொழில்நுட்பம்
- உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்
- தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்
- வியாபாரக் கல்வி
- கணக்கீடு
- பொருளியல்தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister	+94112784832 / +94112784825 / minister.education@moe.gov.lk	ලේකම් / செயலாளர் / Secretary	+94112784811 / +94112785162 / secretary.education@moe.gov.lk

03. அதற்கமைய மேற்படி பாடங்களை அபிவிருத்தி செய்வதற்காக இந் நிதிக் கொடையினைப் பயன்படுத்தி இத்துடன் முன்னிலைப்படுத்தப்படும் வழிகாட்டலுக்கமைய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது வழிகாட்டல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக மாத்திரம் நிதி செலவு செய்தல் வேண்டும்.

04. இச் சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேட்டை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் ஏதும் இருப்பின் அது தொடர்பில் விளக்கமளித்தல் மற்றும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்வி, உயர் கல்வி மற்றும் மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரைச் சாரும்.

நாலக கலுவெவ
செயலாளர்

பிரதிகள்

1. கணக்காய்வாளர் நாயகம்
2. அனைத்து மேலதிக செயலாளர்கள், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
3. பிரதான நிதி உத்தியோகத்தர் (I, II), கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
4. பிரதான கணக்காளர் (நிதி), கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
5. பிரதான உள்ளக கணக்காய்வாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
6. பிரதான உள்ளக கணக்காய்வாளர், மாகாண பிரதம செயலாளர் அலுவலகம்
7. அனைத்து கல்விப் பணிப்பாளர்கள்
8. கணக்காளர் (பல்வகைக் கணக்குகள்), கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
9. கணக்காளர் (கொடுப்பான்வுகள்), கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
10. மாகாண பொறியியல் பிரிவுத் தலைவர்கள்

இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் (SESIP) கீழ் குறிப்பிட்ட பாடங்களின் அபிவிருத்திக்காக பாடசாலை மைய நிதிக் கொடைகளை வழங்குதல் தொடர்பான வழிகாட்டல் கையேடு

1. அறிமுகம்

பாடசாலைக் கல்வியின் பண்புத் தரத்தை விருத்தி செய்வதைக் குறிக்கோளாக கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் கல்வி மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக, குறித்த மறுசீரமைப்புச் செயன்முறையினூடாக எதிர்பார்க்கப்படும் நிலைமாற்றத்தை மிகவும் சாதகமான முறையில் அடைந்து கொள்ளும் பொருட்டு பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் (SESIP) கீழ் நிதிக் கொடைகளை வழங்குவதற்கு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய, இவ் அமைச்சினால் ஒவ்வொரு பாடங்களுக்குமுரியதாக தயாரிக்கப்படும் நியதிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு இந் நிதிக் கொடை வழங்கப்படும். கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையினூடாக எதிர்பார்க்கப்படும் நிலைமாற்றத்தை தமது பாடசாலைகளினுள் சாதமகான முறையில் அடைந்துகொள்வதற்காக இந் நிதிக் கொடையினை பாடசாலை உத்தியோகத்தர்கள் மிகவும் விளைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்துவது எதிர்பார்க்கப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளுள் ஒன்றையோ அல்லது சிலதையோ நிறைவேற்றிக் கொள்வதற்காக இந் நிதிக் கொடையானது பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கிற்கு இறுதிக் கொடுப்பனவொன்றாக நேரடியாக வழங்கப்படும். அதனை வழங்கப்பட்டுள்ள கால் வரையறையினுள் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மாத்திரம் பயன்படுத்தி நிறைவு செய்வதற்கு பாடசாலை உத்தியோகத்தர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

- பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் (ஆய்வுகூடம், கணிதக் கூடம், தொழில்நுட்ப பீடம், விஞ்ஞானக் கள நிலையம் மற்றும் விவசாய ஆய்கூடப் பராமரிப்பு மற்றும் திருத்தற் செயற்பாடுகள்)
- தேவைக்கேற்ப கற்றல் கற்பித்தல் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.
- உயர் மட்ட கற்றல் வெளிகளுக்குரிய (Higher Order Learning Spaces) தளபாடங்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் உபகரணங்களை திருத்தியமைத்தல் (சாதாரண தர/ உயர் தர ஆய்வுகூடங்கள், தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள்)
- கல்வியின் பண்புத் தர விருத்திக்கான உபகரணங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்.
- உரிய பாடங்களுக்குரிய பாட அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதல்

இவ் வழிகாட்டல் கையேட்டினூடாக பாடசாலை மைய நிதிக் கொடைகளை பயன்படுத்துவது தொடர்பில் பாடசாலைத் தலைமைத்துவம் மற்றும் கல்விசார் பணிக்குழுவினருக்கு வழிகாட்டல் ஒன்றை வழங்குவதற்கு மாத்திரம் எதிர்பார்க்கப்படுவதுடன், பாடசாலையில், குறிப்பிட்ட பாடங்களுக்கான தேவைகளுக்கு அமைய உரிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்துதற்கு எந்தவிதமான தடைகளும் இல்லை.

2. நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் TO/GR/MISCE(IV) மற்றும் 2025.04.11ம் திகதியுடைய உள்நாட்டு மற்றும் வெளிநாடு நிதிக் கொடையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களின் நிதி முகாமைத்துவ செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல் எனும் தலைப்பில் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் அன்றாட நிதித் தேவைகளுக்கான கட்டுநிதிகளை திறைசேரி துரிதமாக வழங்க முடியும் என்பதால், உண்மையாக நிதித் தேவை ஏற்படும் போது நிதி கோரும்படி அறியத் தரப்பட்டுள்ளது. உதாரணமாக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் போன்ற பெறுகைச் செயன்முறைகளை ஆரம்பிக்க முன்னர் பாடசாலைக்கு நிதிக் கொடையினை வழங்குவதனூடாக உரிய செயன்முறை நிறைவடையும் வரையில், குறித்த நிதி கணக்கில் பயன்படுத்தப்படாமல் தேங்கியிருக்கும். ஆகையால், கட்டுநிதி ஒரே தடவையில் அவசியமாகாத செயற்பாடுகளை முறையாக ஆரம்பிப்பதற்காக இவ் அமைச்சின் விடயத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களால், உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அவ் அப் பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையைக் குறிப்பிட்டு, குறித்த நிதி ஒதுக்கீட்டு வரையறைக்குட்பட்டு உரிய நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்குமாறு அதிபர்களுக்கு உத்தியோகபூர்வ கடிதமொன்று அனுப்பப்படும். அவ் உத்தியோகபூர்வ கடிதத்தினை பாடசாலைக்கான நிதிக் கொடையை வழங்குவதை உறுதிப்படுத்தும் சான்றாக கருதுதல் வேண்டும். அக் கடிதம் கிடைக்கப் பெற்ற உடன் உரிய செயற்பாடுகளை 2023.12.29ம் திகதியுடைய கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 54/2023 "பாடசாலையை அடிப்படையாக கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கைந்நூல்" மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஆரம்பித்தல் வேண்டும்.

அதன் படி கீழே தரப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

- **பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.**

  பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டு வரையறையினுள் பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும் என்பதுடன், பெறுகைச் செயன்முறையினை மேற்கொண்டு நிறுவனங்களைத் தெரிவு செய்த பின்னர் குறித்த நிறுவனங்களுக்கு கொள்வனவுக் கட்டளைகளை (Purchasing Order) அனுப்ப முன்னர் வலய/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பிரதியுடன் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் விடயத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளருக்கு உரிய பெறுகைத் தீர்மானத்தை முன்னிலைப்படுத்தி, பாடசாலை அபிவிருத்திக் கணக்கிற்கு நிதியை வைப்புச் செய்து கொள்ள நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

மிக முக்கியம்: பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கில் நிதி வைப்புச் செய்யப்பட முன்னர், கொள்வனவுக் கட்டளைகளை (Purchasing Orders) எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் ஒருபோதும் வழங்கலாகாது.

- **பொருட்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தச் செயற்பாடுகள்**

தங்களது பாடசாலைக்கு அறியத் தரப்பட்டுள்ள ஒதுக்கீட்டு வரையினுள் பொருட்கள் மற்றும் உபகரணங்களை திருத்தம் செய்வதற்குரிய தேவைகளுக்கான செலவு மதிப்பீடுகளைத் தயாரித்து, வலய/ மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்து, பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கிற்கு நிதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

- ***கட்டட திருத்தச் செயற்பாடுகள்***

தங்களது பாடசாலைக்கு அறியத் தரப்பட்டுள்ள ஒதுக்கீட்டின் வரையறையினுள் கட்டட திருத்த வேலைகள் அவசியமெனின் அவற்றின் செலவு மதிப்பீடுகளை மாகாண பொறியியலாளரூடாக தயாரித்து வலய/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்களூடாக இவ் அமைச்சின் உரிய விடயத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர்களுக்கும் பிரதியிட்டு பணிப்பாளர் (பொறியியல்) இற்கு சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக குறித்த செலவு மதிப்பீட்டின் 50% பெறுமதியான தொகை பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கில் வைப்பிலிடப்படும். பொறியியலாளர்களது மேற்பார்வை மற்றும் ஆலோசனைகளுக்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட வேலைகளை செயற்படுத்துவதுடன், பொறியியலாளரால் சான்றுப்படுத்தப்பட்ட கட்டணப் பட்டியல்களின் அடிப்படையில் மீதித் தொகை பாடசாலை அபிவிருத்திச் சங்க வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும். மதிப்பீட்டின் பிரகாரம் அனைத்து செயற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாக பொறியியலாளரின் சான்றுப்படுத்தலைப் பெற்று வலய/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், இவ் அமைச்சின் உரிய விடயத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளருக்கு பிரதியுடன் பணிப்பாளர் (பொறியியல்) இற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு: உரிய வருடத்திற்குரிய மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றி முடிக்க வேண்டிய காலம் தொடர்பில் அவ் அவ் விடயங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களால் அறியத் தரப்படும். குறித்த காலத்தினுள் உரிய செயற்பாடுகளை முறையாக ஆரம்பிக்காத பட்சத்தில், பாடசாலைகளுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், அவ் ஒதுக்கீடுகளை வேறு பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கையெடுக்கப்படும்.

அதற்கமைய, குறித்த செயற்பாடுகளுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்பாட்டுக் குழுவொன்றை நியமித்து பணிகள் உரிய செயற்பாடுகள் நிறைவடையும் வரையில் அவற்றை மேற்பார்வை செய்தல், பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் தொடர்பான குறிப்புக்கள்/ ஆவணங்களின் கோவைகளைப் பேணுதல், வழங்கப்பட்டுள்ள கால வரையறையினுள் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்புக்களை உரிய குழுக்களிடம் கையளிப்பது பாடசாலை நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

உரிய செயற்பாடுகள் 2023.12.29*ம் திகதியுடைய கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம்* 54/2023 *மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந் நிதிக் கொடையானது மேற்குறிப்பிட்ட வழிகாட்டல் கைந்நூலின்* 7.0*ம் பந்தியின்* 7.1 *இல் குறிப்பிடப்பட்டுள்ள* S-1 *முதல்* S-4 *வரையான நிதி மூலங்களுக்குரியதாக வழங்கப்படுவதுடன், அதன்* 8.0 *வது பந்தியின்* 8.1 *இல் தரப்பட்டுள்ள செலவுத் தலைப்பு இலக்கங்களான* REX 1, REX 2, REX 5, REX 6 *மற்றும்* CEX 2, CEX 4, CEX 5 *ஆகிய பாடசாலை நிதிப் பயன்பாட்டுத் துறைகளுக்குரியதாக மாத்திரம் செலவுகளை செய்தல் வேண்டும்.*

பாடசாலைகளுக்கு வழங்கப்படும் நிதிக் கொடையினைப் பயன்படுத்துவதற்காக குறிப்பிட்ட பாடங்களுக்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்பாடுகள் மற்றும் செலவு மதிப்பீடுகள் உள்ளடங்கிய திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அதற்காக சுற்றுநிருப இலக்கம் 54/2023 *இன் நிதி அதிகார வரையறைகளுக்கு அமைவாக உரிய அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அதே போன்று இந் நிதிக் கொடைகள் உரிய பாடத்துடன் தொடர்புடைய இவ் அமைச்சில் அமைந்துள்ள கிளைகளூடாக குறித்த பாடங்களின் விருத்தியை குறிக்கோளாக கொண்டு ஒவ்வொரு பாடங்களுக்கும்*

தனித்தனியாக பாடசாலைகளுக்கு வழங்கப்படும் என்பதுடன், நிதிக் கொடையுடன் வழங்கப்படும் ஆலோசனைக் கடிதத்தின் பிரகாரம் அவற்றைப் பயன்படுத்த நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இந் நிதிக் கொடையினை நேரடியாக உரிய பாடங்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளுக்காக மாத்திரம் பயன்படுத்துவதை பாடசாலை அதிபர்கள் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

3. நிதியை பொறுப்பேற்றல்

.உரிய பெறுகைத் தீர்மானங்கள் கல்வி அமைச்சின் உரிய பாடங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், இந் நிதிக் கொடையானது இறுதிக் கொடுப்பனவொன்றாக பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கில் வைப்பிலிடப்படும். குறித்த நிதி பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட உடன், எந்தவொரு தாமதமும் இன்றி, உரிய செயற்பாடுகளை நிறைவு செய்து கொடுப்பனவுகளை செலுத்த நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

அதன் பின்னர் அதிபர் அவ் விடயம் தொடர்பில் 2023.12.29 ம் திகதியுடைய 54/2023 சுற்றுநிருபத்தில் (இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் உட்படலாக) வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய நிதிக் கொடை கிடைக்கப் பெற்றமை தொடர்பில் பற்றுச் சீட்டொன்றை, உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கி, அவற்றின் பக்க இலக்கங்களுடனும், ஏனைய செயற்பாடுகளின் போது குறித்த செயற்பாடுகளை முறையாக நிறைவு செய்தமையை உறுதிப்படுத்தி சம்பவத் திரட்டுப் பதிவேட்டில் குறிப்பிட்டு, அதன் பிரதியொன்றுடன், முகப்புக் கடிதமொன்றைத் தயாரித்து "கணக்காளர் (கொடுப்பனவுகள்), கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" இற்கு கட்டாயமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

அத்துடன், பற்றுச்சீட்டின், முகப்புக் கடிதத்தின் மற்றும் ஏனைய ஆவணங்களின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) மற்றும் இவ் அமைச்சின் உரிய பாடத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

4. நிதி செலவு செய்தல் மற்றும் கணக்குகளில் பதிவு செய்தல்.

இந் நிதிக் கொடையினை 2023.12.29ம் திகதியுடைய கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 54/2023 "பாடசாலையை அடிப்படையாக கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திகான திட்டமிடல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கைந்நூல்" மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் செலவு செய்தல் மற்றும் கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும். மேற்படி நிதிக் கொடையினைப் பயன்படுத்தும் போது 54/2023 சுற்றுநிருபத்தின் 14.0 வது பந்தியில் 14.1.11 முதல் 14.1.15 வரையான உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கிடைப்பனவுகள் மற்றும் செலுத்துகைகளை "கிடைப்பனவு கட்டுப்பாட்டுப் பேரேடு" மற்றும் "செலவுக் கட்டுப்பாட்டுப் பேரேடு" ஆகியவற்றின் உரிய பக்கங்களில் குறிப்பிடுதல் வேண்டும். அதே போன்று இந் நிதிக் கொடையினை விளைதிறன் மிக்க வகையில் உரிய கால வரையறையினுள் செலவு செய்து நிறைவு செய்தல் வேண்டும்.

இருப்பினும், பாடசாலைக்கு வழங்கப்பட்ட நிதிக் கொடையானது உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட பின்னர் விசேட காரணங்களால் மேலும் மீதியாக காணப்படின், குறித்த தொகையினை கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் 7041133 உடைய கணக்கில்

வைப்பிலிடுவதற்கான காசோலைகளை முகப்புக் கடிதமொன்றுடன் கணக்காளர் (கொடுப்பனவுகள்) கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு நவம்பர் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைப்பது கட்டாயமாகும்.

5. *சொத்துக்களை கணக்குகளில் பதிவு செய்தல்*

கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 54/2023 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல் கைந்நூலின் 13.0 வது பந்தியில் கையேற்றல் மற்றும் ஏடுகளில் குறித்தலின் கீழ் 13.6 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொள்வனவு செய்யப்படும் பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்படும் பொருட்களை கொள்வான்வு செய்து ஒரு மாதத்தின் பின்னர் வரும் மாதத்தின் 5 வது தினத்திற்கு முன்னர் மேற்படி சுற்றுநிருபத்தின் இணைப்பு 26 இற்கமைய பூரணப்படுத்தி CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் சொத்துக்கள் மென்பொருளில் கணக்குகளில் பதிவிடுவதற்காக வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பதுடன், அதன் ஒரு பிரதியை கல்வி அமைச்சின் உரிய பாடத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

இவ் ஆவணங்கள் தொடர்பான கோவை ஒன்று பாடசாலையில் பேணப்பட வேண்டும் என்பதுடன், கணக்குகளில் பதிவு செய்தல் தொடர்பில் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும்.

6. *அறிக்கைப்படுத்துதல்*

பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கையினை இத்துடன் தரப்பட்டுள்ள இணைப்பு 01 மாதிரிப் படிவத்திற்கமைய அதிபர் தயாரித்து வலயத்தின் பாட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களூடாக (கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பக் கல்வி, விவசாயம், வணிகம் மற்றும் வியாபாரக் கல்வி) வலயக் கல்விப் பணிப்பாளருக்கு நவம்பர் மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. *கண்காணிப்பு மற்றும் கணக்காய்வு*

இந்த நிதிக் கொடை விளைதிறன் மிக்க வகையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பில், வலய பாடங்களுக்குப் பொறுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் (கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பக் கல்வி, விவசாயம், வணிகம் மற்றும் வியாபாரக் கல்வி) மேற்பார்வை செய்ய வேண்டும் என்பதுடன், அதிபர்கள் இணைப்பு 01 இற்கமைய வழங்கும் தகவல்களைப் பயன்படுத்தி 02 மாதிரிப் படிவத்திற்கமைய உரிய விபரங்களை தயாரித்து வலயக் கல்விப் பணிப்பாளரூடாக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

குறித்த அறிக்கைக்கமைய மாகாண பாட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் (கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பக் கல்வி, விவசாயம், வணிகம் மற்றும் வியாபாரக் கல்வி) மாகாணத்தின் அனைத்து பாடசாலைகளுக்குமுரிய ஒட்டுமொத்த அறிக்கையினை இணைப்பு 03 மாதிரிப் படிவத்திற்கமைய தயாரித்து மாகாணக் கல்விப் பணிப்பாளரூடாக கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் உரிய பாடங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்க வேண்டும்.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும். ஆகையால் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் அடையப் பெறும் வகையில் செயற்படுவது கட்டாயமாகும்.

இணைப்பு 01

இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டம் (SESIP)

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

பாடசாலை மைய நிதிக் கொடை

பாடசாலை மட்டத்தில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை அறிக்கையிடல்

பாடசாலையின் பெயர் : ....

SESIP இன் கீழ் கிடைத்த தொகை (ரூ)	நிதிக் கொடை கிடைத்த திகதி	நிறைவேற்றிய செயற்றிட்டம்/ செயற்றிட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டம்	செலவு செய்யப்பட்ட தொகை (ரூ)	202......ம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்	202.......ம் திகதிக்கு நிதி முன்னேற்றம்	வேறு குறிப்புக்கள்
உதா : 300,000.00	2025/07/01	உயர் தர ஆய்வுகூடத்திற்கான கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	280,000.00	கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது	93%	

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் தகவல்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் : ....

அதிபரின் பெயர் மற்றும் பதவி முத்திரை : ....

திகதி : ....

இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டம் (SESIP)

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

பாடசாலை மைய நிதிக் கொடை

வலய மட்டத்தில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை அறிக்கையிடல்

வலயக் கல்வி அலுவலகத்தின் பெயர் : .... **பாடம் :..**

பாடசாலையின் பெயர்	SESIP இன் கீழ் கிடைத்த தொகை (ரூ)	நிதிக் கொடை கிடைத்த திகதி	நிறைவேற்றிய செயற்றிட்டம்/ செயற்றிட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டம்	செலவு செய்யப்பட்ட தொகை (ரூ)	202......ம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்	202.......ம் திகதிக்கு நிதி முன்னேற்றம்	வேறு குறிப்புக்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் தகவல்கள் உண்மையானவை எனப் பரிந்துரைக்கின்றேன்.

கையொப்பம் : ....

வலய விடயப் பொறுப்பு பணிப்பாளரின் பெயர் மற்றும் பதவி முத்திரை : ....

திகதி : ....

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் :...................................

வலயக் கல்விப் பணிப்பாளரின் பெயர் மற்றும் பதவி முத்திரை :..................................

திகதி :..................................

இணைப்பு 03

இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டம் (SESIP)

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

பாடசாலை மைய நிதிக் கொடை

மாகாண மட்டத்தில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை அறிக்கையிடல்

மாகாணக் கல்வித் திணைக்களம் : .... **பாடம் :..**

வலயத்தின் பெயர்	பாடசாலையின் பெயர்	SESIP இன் கீழ் கிடைத்த தொகை (ரூ)	நிதிக் கொடை கிடைத்த திகதி	நிறைவேற்றிய செயற்றிட்டம்/ செயற்றிட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டம்	செலவு செய்யப்பட்ட தொகை (ரூ)	202......ம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்	202.......ம் திகதிக்கு நிதி முன்னேற்றம்	வேறு குறிப்புக்கள்

கையொப்பம் : .... கையொப்பம் :..................................

மாகாணப் விடய பொறுப்பு பணிப்பாளரின் பெயர் மற்றும் பதவி முத்திரை : .... மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பெயர் மற்றும் பதவி முத்திரை :..................................

திகதி : .... திகதி :..................................